**முதன்மை மாவட்ட நீதிமன்றம், அரியலூர்**

முன்னிலை : **திருமதி. தி. மலர்வாலன்டிணா., எம். எல்.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**அரியலூர்.**

**2026 –ம் ஆண்டு ஜுன் மாதம் 23– ம் நாள் செவ்வாய்கிழமை**

2057 **திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆனி திங்கள் 9 –ம் நாள்**

**I.A.4/2025 in OS 91/2024**

**CNR No.TNAL010040002024**

ராசாயாள் - மனுதாரர்/வாதி

– எதிர் –

1. கோவிந்தசாமி
2. அண்ணாதுரை
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்
   ஜெயங்கொண்டம் – எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 11.06.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். வண்ணமயில் அவர்கள் ஆஜராகியும் 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டு இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது ஆர்டர் 6 ரூல் 17 மற்றும் 18 பிரிவு 151 உரிமையியல் சட்டத்தின்படி இம்மனுவின் சொத்து விபத்தில் கண்ட சொத்துக்களை

சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவாக  கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>உ. மனுவின் சுருக்கம்</u>**

இம்மனுவின் மனுதாரர் மேற்படி வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்துக்கள் பொறுத்து பாகபப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் வாதியின் குடும்ப சொத்துக்கள் குலோத்துங்கநல்லூர் கிராமத்தில் இருந்ததாகவும் அந்த நிலங்கள் அனைத்தும் ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்தில் வந்த தொகையை கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி வழக்கில் அந்த சொத்துக்களை விட்டுவிட்டு தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துவிட்டதாகவும் பின்னிட்டு சட்டப்பிரச்சனை ஏற்படாமல் இருக்கு மேற்படி சொத்து தாவாவில் சேர்த்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவாக கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) 1–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல, மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் தங்கள் குடும்பத்தல் சில சொத்துக்கள் குலோத்துங்நல்லூர் கிராமத்தில் இருந்தது என்றும் அந்த நிலங்கள் அனைத்தும் ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி திட்டத்தில் வந்த தொகையைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி வழக்கில் அந்த சொத்துக்களை விட்டுவிட்டு தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளதாவும் எனவே மனுவில் கண்ட சொத்துக்களை தாவாவில் சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவாகக் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுவில் கண்டுள்ள

சொத்து பொறுத்து தாவா தாக்கல் செய்த காலத்திலேயே மேற்படி சொத்தை சேர்க்காததற்கான சரியான காரணத்தை கூறவில்லை. மனுவில் கண்டுள்ள சொத்தில் பாக உரிமை இருக்குமேயானால் தாவா தாக்கல் செய்த காலத்திலேயே வாதி/மனுதாரர் சொத்துக்களை வழக்கில் சேர்த்திருப்பார். 1, 2 எதிர்மனுதாரர்களுக்கும் அவர்களது தந்தைக்கும் பாகம் பிரித்துக்கொண்டது பொறுத்தும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்து கியரம் பெற்ற பொறுத்தும் எதிர்மனுதாரர்கள் தங்களது எதிர்வழக்குரையில் கூறியுள்ளனர். மனுதாரர்/வாதிக்கு மனுவில் கண்ட சொத்துக்களில் பாக உரிமை இல்லை என்பது நன்றாக தெரிந்தும் வழக்கை விசாரணை நடத்தாமல் இழுத்தடித்து 1ம் எதிர்மனுதாரருக்கு மன உலைச்சலை உண்டாக்க வேண்டும் என்று பொய்யான சங்கதிகளைக் கொண்டு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுவில் கண்ட சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர் தனது சொந்த சம்பாத்தியத்தில் கிரயம் பெற்று தனித்து அனுபவம் செய்து வந்து தற்போது தனது மகன்கள் ராஜேந்திரன், பாண்டியன், வேல்முருகன் ஆகியோர்களுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள 4, 5 அயிட்ட சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரர் தனது மகன்கள் வெளிநாடு சென்று அவர்களது சுயசம்பாத்தியத்தைக் கொண்டு 11.06.2006 தேதியன்று அய்யூர் கிராமத்தைச் சேர்ந்த ராஜகோபால் என்பவரிடம் கிரயம் பெற்றுள்ளார். 11.09.2006 தேதியில் குமாரசாமி மகன் ராஜகோபால் என்பவரிடம் குலோத்துங்கநல்லூர் கிராம சர்வே எண்கள் 7/9 மற்றும் சர்வே எண்.8/2A ல் கிரயம் பெற்றுள்ளார். மேலும் 16.07.2008 தேதியில் சர்வே எண். 7/9 ல் 50 ஏர்ஸ் 30 செண்ட் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரயம் பெற்றுள்ளார். மேற்படி சொத்தினை தனது மகன் ராஜேந்திரனுக்கு 17.08.2016 தேதியில் தானசெட்டியல்மெண்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து கொடுத்துள்ளார், மற்றொரு மகன் பாண்டியனுக்கு

17.08.2016–ல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார், தனது 3 வது மகன் வேல்முருகனுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார். இவ்வாறாக மனுவில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் அவர்களது மகன்களுக்கு தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. தற்போது தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**5. பிரச்சனைக்கான தீர்வு**

இருதரப்பு வாதங்களையும் பரிசீலிக்கையில் வாதி/மனுதாரர் மனுவில் கண்ட சொத்துக்களை அசல் வழக்கு சொத்து விபரத்தில் சேர்த்து அசல்வழக்கை மேல்நடத்த வேண்டும் என்று உத்தரவாகக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதிக்கு மனுவில் கண்ட சொத்துக்களில் எந்தவித பாக உரிமையும் அனுபவமும் இல்லை என்றும் வழக்கு விசாரணை நத்தாமல் வீன் காலதாமதப்படுத்துவதற்காக மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுவில் கண்ட சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர் தனது சொந்த சம்பாத்தியத்தில் கியரம் பெற்று அனுபவம் செய்து வந்து தனது மகன்களுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளதாதகவும் எதிர்மனுதாரரின் மகன்கள் அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் அவர்கள் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ள நிலையில் இவ்வழக்கில் விசாரணைக்குப் பிறகே மனுவில்

கண்டுள்ள சொத்தின் உரிமையை பொறுத்து தீர்மானிக்க முடியும் என்பதால் வழக்கின் முழுமையான தீர்மானத்திற்கு மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை அசல் வழக்கில் சேர்த்து வழக்கை மேல்நடத்துவது அவசியம் என்பதால் நீதியின் நலன் கருதி இவ்வழக்கில் மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை சேர்த்து அசல் வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவா இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 –ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23–ம் நாள் என்னால் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

MALARVALANTINA THILLAIVANAM

Digitally signed by MALARVALANTINA THILLAIVANAM
Date: 2026.06.23 17:21:58 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**அரியலூர்**